Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, பிப்ரவரி 23, 2025 | இதழ் 316

# பிப்ரவரி 23 முதல் 25 வரை மத்தியப் பிரதேசம், பீகார், அசாம் மாநிலங்களுக்குப் பிரதமர் பயணம்

சென்னை, 23 பிப்ரவரி 2025: பிரதமர் திரு நரேந்திர மோடி பிப்ரவரி 23 முதல் 25 வரை மத்தியப் பிரதேசம், பீகார் அசாம் மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார். பிப்ரவரி 23 அன்று மத்தியப் பிரதேசத்தின் சத்தர்பூர் மாவட்டத்திற்குச் செல்லும் அவர், பிற்பகல் 2 மணியளவில் பாகேஷ்வர் தாம் மருத்துவ, அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார். பிப்ரவரி 24 அன்று காலை 10 மணியளவில், போபாலில் உலக முதலீட்டாளர்கள் உச்சிமாநாடு 2025-ஐ பிரதமர் தொடங்கி வைக்கிறார். அதன்பிறகு, அவர் பீகாரின் பாகல்பூருக்குச் செல்கிறார். பிற்பகல் 2:15 மணியளவில், அவர் பிரதமரின் கிசான் திட்டத்தின் 19-வது தவணைத் தொகையை விடுவிக்கிறார். மேலும் பீகாரில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார். மேலும் அவர் குவஹாத்திக்குச் சென்று மாலை 6 மணியளவில், ஜுமோயர் பினாந்தினி (மெகா ஜுமோயர்) 2025 நிகழ்ச்சியில் கலந்து கொள்வார். பிப்ரவரி 25 அன்று, காலை 10:45 மணிக்கு, குவஹாத்தியில் அட்வான்டேஜ் அசாம் 2.0 முதலீடு, உள்கட்டமைப்பு உச்சி மாநாடு 2025-ஐ பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

மத்தியப் பிரதேசத்தில் பிரதமர் - சத்தர்பூர் மாவட்டம், கர்ஹா கிராமத்தில் பாகேஷ்வர் தாம் மருத்துவ, அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்குப் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். அனைத்து தரப்பு மக்களுக்கும் சிறந்த சுகாதார சேவைகளை உறுதி செய்யும் வகையில், ரூ. 200 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள இந்த புற்றுநோய் மருத்துவமனை, ஏழை புற்றுநோயாளிகளுக்கு இலவச சிகிச்சையை வழங்கும். மேலும் அதிநவீன இயந்திரங்கள், சிறப்பு மருத்துவர்களைக் கொண்டிருக்கும். போபாலில் நடைபெறும் இரண்டு நாள் உலக முதலீட்டாளர்கள் உச்சிமாநாடு 2025-ஐயும் பிரதமர் தொடங்கி வைக்கிறார். மத்திய பிரதேசத்தை உலகளாவிய முதலீட்டு மையமாக நிறுவுவதற்கான ஒரு முக்கியமான தளமாக இந்த மாநாடு அமையும். மருந்து, மருத்துவ சாதனங்கள், போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து, தொழில், திறன் மேம்பாடு, சுற்றுலா, குரு சிறு நடுத்தர நிறுவனங்கள் போன்ற வற்றிற்கான அமர்வு, உலகளாவிய தெற்கு நாடுகளின் அமர்வு, லத்தீன் அமெரிக்கா, கரீபியன் அமர்வு போன்ற சர்வதேச அமர்வுகள், முக்கிய பங்குதாரர் நாடுகளுக்கான சிறப்பு அமர்வுகளும் இதில் அடங்கும்.

இந்த மாநாட்டின் போது 3 பெரிய தொழில் கண்காட்சிகள் நடைபெற உள்ளன. இதில் வாகனப் பிரிவில் மத்திய பிரதேசத்தின் வாகன திறன்கள், எதிர்கால போக்கு வரத்துத் தீர்வுகள் காட்சிப்படுத்தப்படும். ஜவுளி, ஆடை அலங்காரக் கண்காட்சி பாரம்பரிய, நவீன ஜவுளி உற்பத்தியில் மாநிலத்தின் நிபுணத்துவத்தை எடுத்துரைக்கும். "ஒரு மாவட்டம் - ஒரு தயாரிப்பு" (ஓடிஓபி) பிரிவு மாநிலத்தின் தனித்துவமான கைவினைத்திறன், கலாச்சாரப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும்.

60-க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள், பல்வேறு சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகள், இந்தியாவைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட முக்கிய தொழில்துறை தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

பீகாரில் பிரதமர்: விவசாயிகள் நலனை உறுதி செய்வதில் பிரதமர் உறுதியாக உள்ளார். இதையொட்டி பாகல்பூரில் பல்வேறு முக்கிய முன் முயற்சிகளை அவர் மேற்கொள்ளவுள்ளார். பாகல்பூரில் பிரதமர் கிசான் திட்டத்தின் 19-வது தவணைத் தொகையை அவர் விடுவிப்பார். நாடு முழுவதும் 9.7 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் ரூ .21,500 கோடிக்கும் அதிகமான தொகையை நேரடிப் பரிமாற்றத்தின் மூலம் பெறுவார்கள்.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு சிறந்த விலை பெறுவதை உறுதி செய்வதில் பிரதமர் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தி வருகிறார். இதைக் கருத்தில் கொண்டு, 2020 பிப்ரவரி 29 அன்று, 10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்கி ஊக்குவிப்பதற்கான மத்திய துறைத் திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார். இந்த அமைப்புகள் விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை கூட்டாக சந்தைப்படுத்தவும், உற்பத்தி செய்யவும் உதவுகின்றன. ஐந்து ஆண்டுகளுக்குள், விவசாயிகளுக்கான பிரதமரின் இந்த உறுதிப்பாடு நிறைவேற்றப் பட்டுள்ளது. இந்த திட்டத்தில் நாட்டில் 10,000-வது உழவர் உற்பத்தியாளர் அமைப்பு உருவாக்கப்பட்டதன் மைல்கல்லைக் குறிக்கும் நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார். தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் மோத்திஹரியில் கட்டப்பட்டுள்ள உள்நாட்டு இனங்களுக்கான சிறப்பு மையத்தையும் பிரதமர் தொடங்கி வைப்பார். அதிநவீன ஐவிஎஃப் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், உள்நாட்டு இனங்களின் சிறந்த கால்நடைகளை உற்பத்தி செய்து இனப்பெருக்கம் செய்தல், விவசாயிகள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு நவீன இனப்பெருக்க தொழில்நுட்பத்தில் பயிற்சி அளித்தல் ஆகியவை இதன் முக்கிய நோக்கங் களாகும். 3 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட பரோனி பால் உபபொருட்கள் ஆலையையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

போக்குவரத்து இணைப்பு, உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான தனது உறுதிப் பாட்டிற்கு ஏற்ப, ரூ. 526 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள வாரிசாலிகஞ்ச் - நவாடா - திலையா ரயில் பிரிவு இரட்டை ரயில்பாதை, இஸ்மாயில்பூர் - ரஃபிகஞ்ச் சாலை மேம்பாலம் ஆகியவற்றை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிப்பார்.

அசாமில் பிரதமர்: அசாம் தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ள பழங்குடியின சமூகங்களின் நாட்டுப்புற நடனமான ஜூமோயிர் நடனத்தில் 8,000 கலைஞர்கள் பங்கேற்கும் கண்கவர் கலாச்சார களியாட்டமான ஜூமோயிர் பினாந்தினி (மெகா ஜூமோயிர்) 2025-ல் பிரதமர் கலந்து கொள்வார். மெகா ஜூமோயிர் நிகழ்வு தேயிலைத் தொழிலின் 200 ஆண்டுகளையும், அசாமில் தொழில் மயமாக்கலின் 200 ஆண்டுகளையும் குறிக்கிறது. குவஹாத்தியில் 2025 பிப்ரவரி 25 முதல் 26 வரை நடைபெறவுள்ள அட்வான்டேஜ் அசாம் 2.0 முதலீடு, உள்கட்டமைப்பு உச்சி மாநாடு 2025-ஐயும் பிரதமர் தொடங்கி வைக்கிறார். இது தொடக்க அமர்வு, ஏழு அமைச்சக அமர்வுகள், 14 கருப்பொருள் அமர்வுகளை உள்ளடக்கியதாக இருக்கும். தொழில் துறை பரிணாமம், உலகளாவிய வர்த்தக ஒத்துழைப்பு, வளர்ந்து வரும் தொழில்கள், 240 க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்களைக் கொண்ட துடிப்பான குரு ஸ்ரீ நடுத்தர நிறுவனங்கள் பிரிவு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, மாநிலத்தின் பொருளாதார சூழலை விளக்கும் ஒரு விரிவான கண்காட்சியும் இதில் இடம்பெறும்.

பல்வேறு சர்வதேச அமைப்புகள், உலகளாவிய தொழில்துறைத் தலைவர்கள், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், புத்தொழில் நிறுவனத்தினர், மாணவர்கள் ஆகியோர் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.




# இந்தியா-ஜப்பான் கூட்டு ராணுவப் பயிற்சியான தர்மா கார்டியனில் பங்கேற்க இந்திய ராணுவக் குழு ஜப்பான் புறப்பட்டது

சென்னை, 23 பிப்ரவரி 2025:தர்மா கார்டியன் எனப்படும் இந்தியா-ஜப்பான் கூட்டு ராணுவப் பயிற்சியின் 6-வது பதிப்பில் பங்கேற்பதற்காக இந்திய ராணுவக் குழுவினர் 22.02.2025 அன்று அப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றனர். இந்த பயிற்சி 2025 பிப்ரவரி 24 முதல் மார்ச் 09 வரை ஜப்பானின் கிழக்கு புஜி பகுதியில் நடைபெறவுள்ளது. தர்மா கார்டியன் பயிற்சி என்பது இந்தியாவிலும் ஜப்பானிலும் மாறி மாறி ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு நிகழ்வாகும். இந்தப் பயிற்சியின் முந்தைய பதிப்பு ராஜஸ்தானில் 2024 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் நடத்தப்பட்டது.

120 வீரர்களைக் கொண்ட இந்தியக் குழுவில் மெட்ராஸ் ரெஜிமெண்டின் ஒரு பிரிவைச் சேர்ந்த வீரர்களும், பிற ஆயுதப் படைப் பிரிவுகளைச் சேர்ந்த வீரர்களும் உள்ளனர்.

இந்த பயிற்சி, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு, கூட்டு திட்டமிடல், கூட்டு உத்திசார் பயிற்சிகளில் கவனம் செலுத்தும். இது செயல்பாட்டுத் திறன்களை மேம்படுத்தவும், போர் திறன்களை வலுப்படுத்தவும் உதவும்.

2024 அக்டோபர் 14 முதல் 17 வரை ஜப்பானுக்கு ராணுவத் தலைமைத் தளபதியின் பயணம் மேற்கொண்டார். இந்நிலையில் இந்த ஆண்டு தர்மா கார்டியன் பயிற்சி, இந்தியா - ஜப்பான் இடையேயான இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும்.

பிராந்திய பாதுகாப்பு, அமைதி, ஸ்திரத்தன்மை ஆகியவை குறித்த இந்தியா - ஜப்பான் இடையேயான பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இந்த பயிற்சி எடுத்துக் காட்டுகிறது. சுதந்திரமான, திறந்த, உள்ளடக்கிய இந்தோ-பசிபிக் என்ற பொதுவான பார்வையையும் இது முன்னெடுத்துச் செல்கிறது. இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்பு, நம்பிக்கை, கலாச்சார இணைப்புகளின் நீடித்த பிணைப்புக்கு ஒரு சான்றாக, இந்த பயிற்சி உள்ளது.

# சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாவை நிறுத்தி வைக்க அதிகாரம் உள்ளது: சுப்ரீம் கோர்ட்டில் கவர்னர் பதில் மனு தாக்கல்

சென்னை, 23 பிப்ரவரி 2025: சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாவை நிறுத்தி வைக்க அதிகாரம் உள்ளது என்று சுப்ரீம் கோர்ட்டில் கவர்னர் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப் பட்ட 12 மசோதாக் களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வருவதாகவும், தமிழகத்தின் 3 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களின் நியமன விவகாரத்தில் கவர்னர் தலையீடு அதிகரிப்பதாகவும் கூறி தமிழக அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகளை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு விசாரித்து வந்தது.

இந்த மாத தொடக்கத்தில் இந்த வழக்கு மீதான விவாதம் நடைபெற்றது. 4 நாட்கள் நடந்த விவாதத்தின் போது சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப் பட்ட மசோதாக்கள் மீது முடிவு எடுக்காமல் கவர்னர் ஏன் பல ஆண்டுகளாக அமைதி காத்தார்? மசோதாவில் முரண்பாடுகள் இருப்பதாக தோன்றினால் அது தொடர்பாக அரசுடன் அவர் ஏன் தொடர்பு கொண்டு பேசவில்லை? என்று கேள்வி எழுப்பினார்கள். தமிழக அரசு சார்பில் வாதாடிய வக்கீல்கள், "சட்ட சபையில் நிறைவேற்றப் பட்ட மசோதாக்களை கவர்னரால் நிறுத்தி வைக்க முடியாது. மாநில அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் செயல்பட வேண்டிய கட்டாயத்தை தவிர கவர்னருக்கு வேறு எந்த விருப்ப உரிமையும் கிடையாது" என்று வாதிட்டனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் வழக்கு மீதான தங்களின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர். அதற்கு முன்னதாக இரு தரப்பினரும் தங்களுக்கு எழும் 12 கேள்விகளுக்கு ஒரு வாரத்தில் விளக்கம் அளித்து சுப்ரீம் கோர்ட்டில் குறிப்புகளாக தாக்கல் செய்ய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகள் மற்றும் ஆளுநர் தரப்புக்கு சுப்ரீம் கோர்ட் உத்தர விட்டிருந்தது.

சுப்ரீம் கோர்ட்டின் இந்த அறிவுறுத்தலை ஏற்று தமிழக அரசு சார்பில் சமீபத்தில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் கவர்னருக்கு மசோதாக்களை நிறுத்தி வைக்க எந்த அதிகாரமும் இல்லை என்று உறுதிப்பட கூறப்பட்டு இருந்தது.

கவர்னர் பதில் - இந்த நிலையில் கவர்னர் ஆர்.என்.ரவி தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் பதில் மனு நேற்று தாக்கல் செய்யப் பட்டது. அதில் கவர்னர் ஆர்.என்.ரவி தனக்கு இருக்கும் அதிகாரங்களை குறிப்பிட் டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் கீழ் கவர்னருக்கு தனிப்பட்ட அதிகாரம் உள்ளது. பிரிவு 200-ல் குறிப்பிடப்பட்டுள்ள "டிஸ்கிரீஷன்" என்ற வார்த்தை கவர்னருக்கு உள்ள தனிப்பட்ட அதிகாரத்தை குறிக்கிறது. கவர்னர் ஒவ்வொரு முறையும் அமைச்சரவை ஆலோசனைப்படி செயல்பட வேண்டிய அவசியம் இல்லை. ஒரு மசோதா மீதான ஒப்புதல் நிறுத்தி வைக்கப் பட்டால் அந்த மசோதா செயலிழந்து விட்டது என்று அர்த்தம். எனவே காலாவதியான மசோதாவை மாநில சட்டசபையில் நிறைவேற்றி மீண்டும் கவர்னருக்கு அனுப்பும் போது அதன் மீது ஒப்புதல் வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவ்வாறு மீண்டும் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்ப கவர்னருக்கு முழு அதிகாரம் உள்ளது. மசோதாக்கள் மீது ஒப்புதல் வழங்குவது, ஜனாதிபதிக்கு பரிந்துரைப்பது, ஒப்புதலை நிறுத்தி வைப்பது உள்பட 4 அதிகாரங்கள் விரிவாக வரையறுக்கப் பட்டுள்ளன. தேவைப் பட்டால் அரசியல் சாசன பிரிவு 200ஐ மேலும் செம்மைப்படுத்த கவர்னர்கள் அதிகாரம் தொடர்பான வழக்குகளை அரசியல் சாசன பிரிவிற்கு மாற்றம் செய்து விசாரிக்கலாம். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# என்எஸ்ஓ இந்தியா, "இந்தியாவில் தரவுத்தொகுப்புகள், பதிவேடுகளின் தொகுப்பு- 2024"-ஐ வெளியிட்டுள்ளது

சென்னை, 23 பிப்ரவரி 2025: புள்ளியியல், திட்ட அமலாக்க அமைச்சகம் இந்தியாவில் தரவுத் தொகுப்புகள், பதிவேடுகளின் தொகுப்பு -2024-ன் புதிய பதிப்பை வெளியிட்டுள்ளது. இது தரவு அணுகல், தகவலறிந்து முடிவெடுப்பதை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கிய முயற்சியாகும். தேசிய புள்ளிவிவர அமைப்பின் தற்போதைய நவீனமயமாக்கலின் ஒரு பகுதியாக, கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள், வணிக நிறுவனங்கள், பொது மக்களுக்கு அரசு தரவு எளிதில் கிடைப்பதை இந்த தொகுப்பு உறுதி செய்கிறது.

இந்த விரிவான ஆதாரம் விவசாயம், சுகாதாரம், கல்வி, தொழிலாளர், கிராமப்புற மேம்பாடு, சுற்றுலா, சமூக நீதி, வங்கி உள்ளிட்ட பல துறைகளை உள்ளடக்கிய மத்திய அரசின் 40 அமைச்சகங்கள், துறைகளிலிருந்து பெறப்பட்ட சுமார் 270 தரவுத் தொகுப்புகள், பதிவேடுகளை ஒருங்கிணைத்துள்ளது. அரசுத் தரவுத் தொகுப்புகளின் கிடைக்கும் தன்மை, நோக்கம், அணுகல் ஆகியவற்றை சிரமமின்றி ஆராய மக்களுக்கு இது உதவுகிறது. முக்கியமான தகவல்களை ஒரே இடத்தில் ஒருங்கிணைப்பதன் மூலம், தரவு நிர்வாகத்தை முன்னேற்றுவதற்கும், ஆராய்ச்சியை வளர்ப்பதற்கும், ஆதார அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் இத்தொகுப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தத் தரவுத் தொகுப்புகள் திருத்தப் பட்ட தரவுகளை இணைக்க அவ்வப் போது புதுப்பிக்கப் படுகிறது. இது கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வணிகங்கள், சிவில் சமூக அமைப்புகள் உட்பட அனைத்து தரப்பினரும், மதிப்பு மிக்க நுண்ணறிவு களைப் பெறுவதற்கும் தேசிய வளர்ச்சிக்கு அரசுத் தரவுகளை திறம்பட பயன்படுத்துவதற்கும் இந்த தொகுப்பைப் பயன்படுத்தலாம்.

# மகா கும்பமேளாவில் சனாதன தர்மத்தால் ஈர்க்கப்பட்ட வெளிநாட்டு பக்தர்கள்: 18 நாடுகளைச் சேர்ந்த 296 பேர்-ஜகத்குரு சாய் மா லட்சுமி தேவியின் குரு தீட்சை



சென்னை 23, பிப்ரவரி 2025: அமெரிக்கா, அயர்லாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், பெல்ஜியம், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து மற்றும் அயர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் சனாதன தர்மத்துடன் இணைவதன் மூலம் அமைதியை அனுபவித்து வருகின்றனர்

பிப்ரவரி 14, 2025, பிரயாக்ராஜ்: பிரயாக்ராஜில் நடந்து வரும் மகா கும்பமேளா, உலகம் முழுவதிலுமிருந்து சனாதன தர்மத்தின் காலத்தால் அழியாத போதனைகளுக்கு பக்தர்களை ஈர்த்துள்ளது. மொத்தம் 296 வெளிநாட்டு பக்தர்கள் ஜகத்குரு சாய் மா லட்சுமி தேவியிடமிருந்து குரு தீட்சை பெற்றனர், இதில் 197 பெண்கள் மற்றும் 99 ஆண்கள் அடங்குவர். இந்த பக்தர்கள் சனாதன தர்மத்தை ஏற்றுக் கொள்ள 18 வெவ்வேறு நாடுகளிலிருந்து பயணம் செய்தனர், இதில் அமெரிக்கா (130), கனடா (48), ஜப்பான் (25), பெல்ஜியம் (25) மற்றும் ஆஸ்திரேலியா (15) ஆகிய நாடுகளின் முக்கிய பங்கேற்புடன். கும்பமேளா நகரத்தின் பிரிவு 17 இல் உள்ள சக்திதாம் முகாமில் விழாக்கள் நடைபெற்றன.

போர், மன அழுத்தம், நோய், போதை பழக்கம் மற்றும் தனிப்பட்ட இழப்பு ஆகியவற்றால் அதிகரித்து வரும் உலகில், சனாதன தர்மத்தின் எளிமை மற்றும் அமைதி, உள் அமைதியைத் தேடும் பல வெளிநாட்டினருக்கு ஒரு கலங்கரை விளக்கமாக மாறியுள்ளது.

சக்திதாம் முகாமில் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு பக்தர்கள் முறையாக குரு தீட்சை பெற்றனர். சிலர் அமைதி மற்றும் மனநிறைவின் வெளிப்படையான வெளிப்பாடுகளுடன் "ஓம் நம சிவாய" போன்ற வேத மந்திரங்களுக்கு நடனமாடுவதைக் காண முடிந்தது.

பண்டைய ஞானத்தில் வேர்களைக் கொண்ட சனாதன தர்மம், இன்றைய ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு வழிகாட்டும் ஒளியை வழங்குகிறது என்று ஜகத்குரு சாய் மா லட்சுமி தேவி விளக்கினார்.

"இந்தியாவிற்கு வெளியே உள்ள மக்கள் சனாதன தர்மத்தை நம்பிக்கையுடன் பார்க்கிறார்கள், ஏனெனில் இது அச்சங்கள், போதை பழக்கங்கள் மற்றும் நவீன வாழ்க்கையின் நிலையான சலசலப்பைக் கடக்க உதவுகிறது. இந்த ஆன்மீகப் பாதையின் எளிமை மற்றும் தெளிவு வெளிநாட்டினரை ஆழமாக ஈர்த்துள்ளது," என்று அவர் கூறினார்.

மகா கும்பமேளா சனாதன தர்மத்திற்கு ஒரு புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய இருப்பை வழங்கியுள்ளது, வெளிநாட்டினர் அமைதி, அன்பு மற்றும் சுய உணர்தலுக்கான தேடலில் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். பலர் இந்த போதனைகளை உலகம் முழுவதும் பரப்ப உறுதியளித்துள்ளனர்.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த தொழிலதிபரும் விலங்கு நல வழக்கறிஞருமான நோயல், மன அழுத்தத்துடன் போராடி, தனது வாழ்க்கையை முடித்துக்கொள்ள நினைத்ததை பகிர்ந்து கொண்டார். இருப்பினும், ஜகத்குரு சாய் மாவின் வழிகாட்டுதலின் கீழ் வந்த பிறகு அவரது வாழ்க்கை நேர் மறையான திருப்பத்தை எடுத்தது. "நான் உணரும் பேரின்பத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது" என்று அவர் கூறினார்.

மொரீஷியஸில் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்த ஜகத்குரு சாய் மா 15 ஆண்டுகளுக்கும் மேலாக உலகளவில் இந்து மதத்தை தீவிரமாக ஊக்குவித்து வருகிறார். 2019 ஆம் ஆண்டில், அவரது வழிகாட்டுதலின் கீழ் ஒன்பது வெளிநாட்டு சீடர்கள் இந்து மதத்தைத் தழுவினர், மேலும் மூன்று பெண் துறவிகள் உட்பட மகாமண்டலேஷ்வர் என்ற பூட்டத்தால் கௌரவிக்கப்பட்டனர். இன்று, அவரது சீடர்கள் ஜப்பான், அமெரிக்கா, இஸ்ரேல், பிரான்ஸ் மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் உட்பட 12க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

2025 ஆம் ஆண்டு மகா கும்பமேளா மீண்டும் ஒருமுறை சனாதன தர்மத்தின் உலகளாவிய ஈர்ப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, ஏனெனில் பல்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்கள் ஆன்மீக ஆறுதலையும் உலகளாவிய நல்லிணக்கத்தையும் நாடுகிறார்கள்.

# இராயபுரம் பகுதியில் பெண்ணை மிரட்டி பாலியல் தொந்தரவு கொடுத்து கணவர் குடும்பத்தாரிடம் தவறாக கூறி குடும்பத்தில் பிரச்சனை ஏற்படுத்திய நபர் கைது.



சென்னை, 23 பிப்ரவரி 2025: சென்னை, இராயபுரம் பகுதியில் வசித்து வரும் 30 வயது பெண் ஒருவர் டபிள்யு-15 இராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில், தனக்கு 2021ம் ஆண்டு திருமணமாகி குழந்தை உள்ள நிலையில் கணவரை பிரிந்து பெற்றோர் வீட்டில் வசித்து வருவதாகவும், 2015 ம் ஆண்டு எங்களது வீட்டில் வாடகைக்கு இருந்த ரகுநாதன் என்ற மதபோதகர் தனக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததால், தனது தந்தை அவரை வீட்டை காலி செய்ய சொல்லி அனுப்பிவிட்டதாகவும், பின்னர் தான் கல்லூரிக்கு செல்லும்போதும், வேலைக்கு செல்லுமபோதும் ரகுநாதன் பின் தொடர்ந்து வந்து பாலியல் தொந்தரவு கொடுத்ததாகவும், தனக்கு 2021ம் ஆண்டு திருமணமாகி கணவருடன் வாழ்ந்து வரும் நிலையில், குழந்தை பேறுக்காக எனது பெற்றோர் வீட்டிற்கு வந்தபோது, ரகுநாதன் மீண்டும் செல்போனில் பேசி பாலியல் தொந்தரவு கொடுத்து வந்ததாகவும், மேலும் ரகுநாதன் தனது கணவரிடம் தனக்கும், ரகுநாதனுக்கும் உறவு உள்ளதாக தவறுதலாக கூறியதால், கணவர் பிரிந்து சென்று விட்டதாகவும், தற்போது எனது கணவர் விவாகரத்து கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும், எனக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து, கணவரிடம் தவறுதலாக கூறி எனது குடும்பத்தில் பிரச்சனையை உண்டாக்கி, விவாகரத்து வரை கொண்டு சென்ற ரகுநாதன் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து டபிள்யு-15 இராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

டபிள்யு-15 இராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில், புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்தததின்பேரில், எதிரி ரகுநாதன், வ/44, த/பெ.தம்பிராஜ், பி பிளாக், நக்கீரன் நகர், தேனாம்பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி ரகுநாதன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# கர்ப்பிணி தாய்மார்கள் அனைவரும் மகிழச்சியாக இருந்து நல்ல ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் - சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன்



சென்னை, 23 பிப்ரவரி 2025: தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கலைஞர் அரங்கத்தில் 22.02.2025 அன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில், நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் தெரிவித்ததாவது:- ஒன்றிய அரசின் போஷன் அபியான் திட்டத்தில் வளர் இளம்பெண்கள், கர்ப்பிணி பெண்கள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பெண்கள் கருவுற்றது முதல் பிறக்கும் குழந்தையின் மூன்று வயது வரை போஷன் அபியான் திட்டத்தின் மூலமாக ஊட்டச்சத்து வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா இன்று தூத்துக்குடியில் நடத்தப்படுகிறது. பெண்கள் தங்களை கவனித்துக் கொள்ள வேண்டும், வயிற்றில் இருக்கும் குழந்தையையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த சமூதாய வளைகாப்பு விழா நடத்தப்படுகிறது. பெண்கள் கர்ப்பம் தரித்தவுடன் அசவுகரியங்கள் இருக்கும். மூன்றாம் மாதத்தில் அவை சரியாகிவிடும், கர்ப்பிணிகள் சத்தான உணவை உண்டால் தான் ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க முடியும். நமது குழந்தை அறிவாற்றல் மிக்க குழந்தையாகவும் ஆரோக்கியமான குழந்தையாகவும் வரவேண்டும் என்றால் நல்ல சத்தான உணவுகளை உண்ண வேண்டும். தானிய வகைகள், கீரை வகைகளை அதிக அளவில் சாப்பிட வேண்டும். பேரிச்சம் பழம் ஆப்பிள் முட்டை பால் போன்றவற்றையும் அதிக அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தை பிறந்த உடன் அந்தந்த வயதிற்கு ஏற்ற வளர்ச்சி இருக்கிறதா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். அ ா தி மத வேறுபாடின்றி உங்கள் அனைவருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த சமுதாய வளைகாப்பு விழாவை நடத்துகிறார்கள். நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்து நல்ல ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் என மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாலை, வளையல்களை அணிவித்து சேலை, தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு அடங்கிய சீர்வரிசை பொருட்களை கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி ஆர். ஐஸ்வர்யா, இ.ஆ.ப., மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி பிரேமலதா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் நகர்புறம் திருமதி ம.ரூபிபெர்ணான்டோ, மாவட்ட திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் திருமதி மு.பெ.காயத்ரி மற்றும் அரசு அலுவலர்கள் கர்ப்பிணி தாய்மார்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திரு.வி.க நகர் பகுதியில் தண்ணீர் போர் போடும் வேனில் இருந்து இரும்பு கம்பியை திருடிய நபர் கைது.



சென்னை, 23 பிப்ரவரி 2025: சென்னை, பெரம்பூர், அம்பேத்கர் 8வது தெருவில் வசித்து வரும் சசிகுமார், வ/30, த/பெ.தரணிவேந்தன் என்பவர் 21.02.2025 அன்ற காலை பெரம்பூர், சாந்தி நகர் 2வது லேன் அருகே சென்று கொண்டிருந்த போது, அங்கு நிறுத்தப்பட்டிருந்த அவரது சித்தப்பாவிற்கு சொந்தமான தண்ணீர் போர் போடும் வேனில் இருந்த சுமார் 35 கிலோ எடையுள்ள இரும்பு கம்பியை அடையாம் தெரியாத நபர் கழற்றி திருடிக்கொண்டு தப்ப முயன்றுள்ளார். இதனை கண்ட சசிகுமார் சத்தம் போட்டு, அருகிலிருந்த பொதுமக்கள் உதவியுடன் மேற்படி நபரை மடக்கிப்பிடித்து கே-9 திரு.வி.க நகர் காவல் நிலையத்தில் ஒப்படைத்து கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு

செய்து விசாரணை மேற்கொண்டனர்.


கே-9 திரு.வி.க நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி இரும்பு கம்பிகளை திருடி பிடிபட்ட மதன்குமார், வ/23, த/பெ.உமாசங்கர், காந்தி நகர், 2வது தெரு, கொடுங்கையூர், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்படி இரும்பு கம்பி மீட்கப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி மதன்குமார் மீது ஏற்கனவே கே-3 அமைந்தகரை காவல் நிலையத்தில் 1 திருட்டு வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி மதன்குமார் விசாரணைக்குப் பின்னர் 21.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்விசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# தாய்மொழி தினம் கொண்டாட்டம்



சென்னை, 23 பிப்ரவரி 2025: ரெயில்வே கூடுதல் கோட்ட மேலாளரும் கூடுதல் தலைமை மொழி அதிகாரியுமான அங்கூர் சவுகான் அறிவுறுத்தலின்படி தாய்மொழி தினம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நடைபெற்ற வினாடி வினா போட்டிக்கு உதவிப் பணியாளர் அதிகாரி கே. ஸ்ரீரங்கநாயகி மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரி ஏ. ஏழுமலை ஆகியோர் நடுவர்களாக இருந்தனர். போட்டியை சென்னை பிரிவின் மூத்த மொழி அதிகாரி ஸ்ரீசீனிவாசன் ரூடத்தினார்.

போட்டியில் ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம் போன்ற தொலைதூர இடங்களிலிருந்து பல்வேறு துறைகளைச் சேர்ந்த ரெயில்வே ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
RNI No. : TNTAM24940
திசைச் காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் 517 வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்



சென்னை, 23 பிப்ரவரி 2025: தூத்துக்குடி மாவட்டம், வ.உ.சி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 22.02.2025 அன்று மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், மாநில ஊரக / நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நடத்தப்பட்ட மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் விழாப்பேருரையாற்றி வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 118 நிறுவனங்கள் மற்றும் 12 திறன் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 2374 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். இதில் ஆண் வேலை நாடுநர்கள் 1206 மற்றும் பெண் வேலை நாடுநர்கள் 1168 ஆவர். 213 ஆண் வேலை நாடுநர்கள் மற்றம் 137 பெண் வேலை நாடுநர்கள் என மொத்தம் 350 வேலை நாடுநர்கள் இரண்டாம் கட்ட நேர்காணலுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். மேலும், 33 மனுதாரர்கள் திறன் பயிற்சி தொடர்பான விண்ணப்பங்களை சமர்பித்துள்ளனர்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் 310 ஆண்கள் மற்றும் 207 பெண்கள் என மொத்தம் 517 வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் திருமதி சொர்ண்லதா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி பெ.மல்லிகா, மண்டல இணை இயக்குநர், கல்லூரி கல்வி திருநெல்வேலி மண்டலம் திரு.அ.இரவீந்திரன், மண்டல இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) திரு.கா.சண்முகசுந்தர், தூத்துக்குடி மாவட்ட வேலை வாய்ப்பு உதவி இயக்குநர் திருமதி பேச்சியம்மாள், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் (தொ.வ) திரு.சை.சையது முகம்மது மற்றும் அரசு அலுவலர்கள் கல்லூரி மாணவ - மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வேப்பேரி மற்றும் பெரம்பூர் பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த 2 நபர்கள் கைது. மொத்தம் 22.63 கிலோ கஞ்சா மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல்.





சென்னை 23, பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல், ஜி-1 வேப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் குழுவினர், 21.02.2025 அன்று காலை, புரசைவாக்கம், தானா தெரு, ஆவின் விற்பனையகம் அருகில் கண்காணித்து அங்கு எண் பலகை இல்லாத பல்சர் இருசக்கர வாகனத்தில் கஞ்சா எடுத்து வந்த முருகன், வ/29, த/பெ. அண்ணாமலை, விநாயகர் தெரு, 3வது குறுக்கு தெரு, தென்றல் நகர், திருமுல்லை வாயல், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மொத்தம் 12 கிலோ எடை கொண்ட கஞ்சா மற்றும் 1 பல்சர் இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. இதே போல, அண்ணாநகர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் 21.02.2025 அன்று பெரம்பூர், சிறுவள்ளூர் சாலையில் கண்காணித்து அங்கு சட்டவிரோத விற்பனைக்காக பையில் கஞ்சாவை மறைத்து எடுத்து வந்த ரவிகுமார், வ/22, த/பெ.சுரேஷ், காவாங்கரை தெரு, லட்சுமிபுரம், அரிகிலபாடி, தக்கோலம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 10.63 கிலோ எடை கொண்ட கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி ரவிகுமார் ஆந்திர மாநிலத்தில் இருந்து கஞ்சா வாங்கி வந்து சென்னையில் விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. மேலும், விசாரணையில் எதிரி ரவிகுமார் மீது அரக்கோணம், தக்கோலம், நெமிலி ஆகிய காவல் நிலையங்களில் திருட்டு, வழிப்பறி, ஆயுதங்கள் வைத்திருந்தது உட்பட சுமார் 7 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும், விசாரணைக்குப் பின்னர், 21.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## வேளச்சேரி பகுதியில் தாயை கொலை செய்த வழக்கில், சரித்திர பதிவேடு குற்றவாளியான எதிரிக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதம் ரூ.5,000/- விதித்து நீதிமன்றம் தீர்ப்பு.



சென்னை 23, பிப்ரவரி 2025: 2021ம் ஆண்டு, வேளச்சேரி, திரு.வி.க. தெருவில் ராமலிங்கம், வ/52, த/பெ.சீனிவாசன் என்பவர் குடும்பத்துடன் வசித்து வந்தபோது, ராமலிங்கத்தின் மகன் மூர்த்தி, வ/31 என்பவர் 19.09.2021 அன்று அவரது தநதை ராமலிங்கம் மற்றும் தாயார் லட்சுமி ஆகியோரிடம் மது அருந்த பணம் கேட்டுள்ளார். இருவரும் பணம் தராத நிலையில், மூர்த்தி தகராறு செய்து கத்தியால் அவரது தாயார் லட்சுமியை கொலை செய்துள்ளார். இது தொடர்பாக, யி-7 வேளச்சேரி காவல் நிலையத்தில் கொலை பிரிவில் வழக்குப் பதிவு செய்து, எதிரி மூர்த்தி, வ/31, த/பெ.ராமலிங்கம் என்பவரை கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர். கைது செய்யப்பட்ட எதிரி மூர்த்தி யி-7 வேளச்சேரி காவல் நிலைய சரித்திரி பதிவேடு குற்றவாளி ஆவார். இவ்வழக்கு, யி-7 வேளச்சேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சென்னை, அல்லிக்குளம் வளாகத்தில் உள்ள மகிளா நீதிமன்றத்தில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்களின் கொலை, கொள்ளை போன்ற கொடுங்குற்ற வழக்குகளில் நீதிமன்ற நிலுவை வழக்குகளை காவல் நிலைய அதிகாரிகள் தொடர்ச்சியான கண்காணிப்புடன் சிதிமன்ற ரூடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரும் வரை சீரிய முயற்சி எடுக்க வேண்டும் என அனைத்து காவல் அதிகாரிகளுக்கும் வழங்கிய உத்தரவின் பேரில், மேற்கண்ட கொலை வழக்கில் தொடர்ச்சியாக சாட்சிகள் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணை நிறைவடையும் வரை நிலைய ஆய்வாளர், நீதிமன்ற காவல் ஆளிநர் சீரிய பணியாற்றி விசாரணை முடிவடைந்து, நீதிமன்றத்தால் இவ் வழக்கில் 21.02.2025 அன்று இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டது. இக்கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி மூர்த்தி மீது குற்றம் நிருபிக்கப் பட்டதால், எதிரி மூர்த்திக்கு 10 ஆண்டுகள் கடுங்கால் சிறை தண்டனை மற்றும் ரூ.5,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 3 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என கனம் மகிளா நீதிமன்ற நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த யி-7 வேளச்சேரி காவல் நிலைய ஆய்வாளர், அரசு தரப்பு வழக்குறைஞர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணி காவல் குழுவினரை காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

## அனைத்து துறைகளிலும், அனைத்து மாவட்ட மக்களும் பயன் பெறும் வகையில் முன்னோடித் திட்டங்களை தீட்டி, செயல் வடிவம் கொடுத்து அதன் பலனை அனைத்து தரப்பு மக்களும் அனுபவிக்கும் வண்ணம் செயல்படுபவரே நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் - மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் பெருமிதம்



சென்னை, 23 பிப்ரவரி 2025: தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம், அம்மன்புரம் கிராமத்தில் 22.02.2025 அன்று மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி நடத்திய, கால்நடை மருத்துவ முகாம், கால்நடை கண்காட்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பட்டறை ஆகியவற்றை துவக்கி வைத்து பயனாளி களுக்கு இடுபொருட்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்ததாவது :- நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றுள்ளார்கள். அனைத்து துறைகளிலும், அனைத்து மாவட்ட மக்களும் பயன் பெறும் வகையில் முன்னோடித் திட்டங்களை தீட்டி, செயல் வடிவம் கொடுத்து அதன் பலனை அனைத்து தரப்பு மக்களும் அனுபவிக்கும் வண்ணம்

செயல்படுபவரே நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அந்த வகையில் தென்மாவட் டங்களில் கால்நடை வளர்ப்போர், பயன்பெறும் வகையில் மருத்துவக்கல்லூரியை மையமாக வைத்து பல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

உங்களுக்கெல்லாம் தெரியும் தென் மாவட்டங்களில், குறிப்பாக தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங் களில் செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் மற்றும் நாட்டின நாய்கள் அதிக அளவில் உள்ளன. இவற்றை பராமரிக்கும் விவசாயிகள் பயனடையும் வண்ணம் திட்டங்கள், ஆராய்ச்சிகள் ஆகிய முன்னெடுப்புகளை இந்த அரசு செய்து வருகிறது. அவற்றில் சிலவற்றை மட்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது உறுப்புக் கல்லூரியாக திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 2012 ஆம் ஆண்டு 139.21 ஏக்கர் நிலப்பரப்பில் திருநெல் வேலி மாவட்டம் இராமையன்பட்டியில் செயல்பட்டு வருகிறது. தென் மாவட்ட கால்நடை விவசாயி களின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்விக்கு தேவயான முழு வசதிகளுடன் இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. தென் மாவட்டங்களின் பூர்வீக ஆட்டினங் களான செவ்வாடு, இராமநாதபுரம் வெள்ளை, கச்சக்கட்டி கருப்பு செம்மறி ஆட்டினங்களை பாதுகாப்பதற்கான ஆராய்ச்சி மையம் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இக்கல்லூரி வளாகத்தில் 2023 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் மூலம், ஆடுவளர்ப் போருக்கு தூய மரபுத்தன்மை கொண்ட வீரிய இரக செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தென் மாவட்டங் களில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில், இக்கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு கோடியே, 50 இலட்ச ரூபாய் செலவில் தீவன ஆலை மற்றும் தீவன பகுப்பாய்வு ஆய்வகம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த தீவன ஆலை மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்போருக்கு தீவனங்களும் தாதுப்புக் கலவையும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு சிறந்த உள்கட்டமைப் பினை வழங்கும் விதமாக கூடுதல் ஆண்கள் விடுதி, கூடுதல் பெண்கள் விடுதி மற்றும் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் எச். டி. மின்நிலையம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.13.41 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2022-23 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் (09.03.2024 ) அன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கப் பட்டது.

மேலும் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் 5 கோடியே 30 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 20.08.2024 அன்று காணொளி வாயிலாகத் திறந்து வைக்கப் பட்டது. மேலும், கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 640 கேவிஏ எச். டி. மின் நிலையம் (31.01.2024) முதல் செயல்பட்டு வருகிறது. இப்பணிகளின் காரணமாக இக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் மட்டுமல்லாமல், கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கால்நடை சிகிச்சை வளாகத்திற்கு கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகளை அழைத்து வரும் பொதுமக்கள், விவசாயிகள் என அனைவரும் பயனடைகின்றனர்.

கால்நடைகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்களை கண்டறிதலில் கால தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் ரூபாய் 1.61 கோடி நிதி ஒதுக்கீட்டில் இக்கல்லூரி வளாகத்தில் விலங்கு வழிப் பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம் கடந்த 2021-22 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கால்நடை மற்றும் கோழிகளில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாட்டு முறையினைக் கண்டறியும் ஆராய்ச்சிக்காக கடந்த 2022-23 ஆம் ஆண்டு இக்கல்லூரியில் நுண்ணுயிர் எதிர்ப்பு பற்றிய தொற்று நோயியல் ஆய்வகம் ஒரு கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசினால் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திருச்செந்தூர் நகரில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவுவதற்கான ஆணை பிறப்பிக்கப் பட்டு ரூபாய் ஒரு கோடியே 59 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு தற்போது கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒரு துறையில் மட்டும் செய்த சாதனைப் பட்டியலே முடிவில்லாமல் நீண்டு கொண்டே செல்கிறது.

இன்று அமைக்கப் பட்டுள்ள கண்காட்சியில் பலவிதமான செயல்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் குறித்த விளக்கங்களை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறந்த பராமரிப்பு முறைகளை கையாளும் போது கால்நடைகளின் உற்பத்தி பெருகி பொருளாதார ஏற்றம் பெற வழி வகுக்கும் என்பதால் அனைவரும் இவற்றை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறையின் சேவைகளை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என்று மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்துள்ளார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர்.க.ந.செல்வக்குமார், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் பட்டியலின மக்களுக்கான உபதிட்டத்தின் திட்ட அலுவலர் மற்றும் அடிப்படை அறிவியல் புலத்தின் முதல்வர் முனைவர். சதீஷ்குமார், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வரும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் பட்டியலின மக்களுக்கான உபதிட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ம.செல்லப்பாண்டியன், தூத்துக்குடி கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.சு.சஞ்சீவி ராஜ், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.சுகுமாரன், திருச்செந்தூர் வட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள், பொதுமக்கள்பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com RNI No. - TNTAM24848
உள்ளது உள்ளபடி



# சென்னையில் ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு வணிக மாநாடு (எம்இபிசி) - சவுத் கனெக்ட் 2025'-ஐ துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

## ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு (தெற்கு) அமைப்பின் தலைவராக நடிகர் கமல்ஹாசன் அறிவிக்கப்பட்டார்




சென்னை 23, பிப்ரவரி 2025: சென்னையில் இன்று நடைபெற்ற 'ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு வணிக மாநாடு (எம்இபிசி) - சவுத் கனெக்ட் 2025'-ஐ தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின், நடிகர் மற்றும் இயக்குநர் கமல் ஹாசனுடன் இணைந்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஃபிக்கி ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு (தெற்கு) அமைப்பின் தலைவராக கமல் ஹாசன் அறிவிக்கப்பட்டார்.

உலகளாவிய பொழுதுபோக்கு சந்தையில் இந்தியாவின் இடத்தை வடிவமைப்பதில் பிராந்திய மொழிகள் திறன்வாய்ந்த சக்திகளாக உருவாகி வருவதையும், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறை பெரும் மாற்றத்திற்கு உள்ளாகி வருவதையும் கருத்தில் கொண்டு, இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பான ஃபிக்கி இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டு நாள் நிகழ்வை சென்னையில் நடத்துகிறது. திரைப்படம், தொலைக்காட்சி, ஓடிடி, கேமிங், அனிமேஷன் மற்றும் டிஜிட்டல் பொழுதுபோக்கு ஆகியவற்றின் எதிர்காலத்தை ஆராய்வதற்கான முக்கிய தளமாக செயல்படுவதை இந்நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் படைப்புலக பொருளாதாரத்தில் புதுமை, ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கு இது அடித்தளம் அமைக்கிறது.

உலகளாவிய அங்கீகாரத்தை ஈர்ப்பதில் பிராந்திய மொழிகளின் முக்கியத்துவத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தனது உரையில் வலியுறுத்தினார். தமிழ்நாட்டை ஒரு பொழுதுபோக்கு மையமாக மாற்ற வேண்டும் என்ற டாக்டர் கலைஞர் (டாக்டர் கருணாநிதி) அவர்களின் கனவை நனவாக்குவதற்கான தனது உறுதிப்பாட்டை அவர் வெளிப்படுத்தினார். சென்னையில் 152 ஏக்கர் பரப்பளவில் ஒரு அதிநவீன திரைப்பட நகரத்தை நிறுவுவது இந்த பயணத்தில் ஒரு முக்கிய முயற்சியாக திகழும். இந்த உலகத்தரம் வாய்ந்த நகரத்தில் அதி நவீன போஸ்ட்-புரொடக்ஷன் ஸ்டுடியோக்கள், மெய்நிகர் தயாரிப்பு தொழில்நுட்பங்கள், அனிமேஷன் மற்றும் விஎஃப்எக்ஸ் ஸ்டுடியோக்கள், எல்இடி சுவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கான 5 நட்சத்திர ஹோட்டல் என அனைத்து வசதிகளும் இடம்பெறும்," என்று திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

டாக்டர் கருணாநிதியின் கனவை நிறைவேற்றும் நோக்கில் மற்றுமொரு முக்கியமான அறிவிப்பையும் அவர் வெளியிட்டார். "2010ம் ஆண்டு, டாக்டர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், கேளம்பாக்கம் அருகே 90 ஏக்கர் நிலம் திரைப்படத் துறை அமைப்புகளுக்கு குடியிருப்பு வளாகங்கள் கட்டுவதற்காக 99 ஆண்டு குத்தகைக்கு ஒதுக்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட வேண்டும், ஆனால் பயனாளிகளால் அதை முடிக்க முடியவில்லை, இதனால் உத்தரவு செல்லாமல் போனது. திரையுலக சங்கங்களின் கோரிக்கைக்கு செவி சாய்த்து, நமது முதலமைச்சர் அந்த உத்தரவைத் திருத்தி, நிலத்தை திரையுலகினர் பயன்படுத்த அனுமதித்துள்ளார். திருத்தப்பட்ட உத்தரவு சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது," என்றார்.

திரு கமல்ஹாசன் பேசுகையில், "இந்திய சினிமா நமது கலாச்சாரத்தின் உண்மையான தூதராக திகழ முடியும். இந்திய சினிமாவின் வளர்ச்சிக்கு ஒரு நீண்டகால தொலைநோக்கு திட்டம் நமக்கு தேவை. இதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைக் கட்டுப்படுத்தாமல் சந்தை வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய விதிமுறைகளை உருவாக்க வேண்டும்," என்று கூறினார்.

"மேலும், சினிமா மீதான மாநில பொழுதுபோக்கு வரியை மறுபரிசீலனை செய்து சீர்திருத்த வேண்டும் என்பதை ஒரு வேண்டுகோளாக துணை முதல்வரிடம் தெரிவிக்கிறேன்," என்று அவர் மேலும் கூறினார்.

ஃபிக்கி ஊடக மற்றும் பொழுதுபோக்கு குழுவின் தலைவரும், ஜியோஸ்டார் பொழுதுபோக்கு - தலைமை நிர்வாக அதிகாரியுமான கெவின் வாஸ் பேசுகையில், "தென்னிந்திய பொழுதுபோக்கு துறை நாடு தழுவிய வளர்ச்சியை அடைந்து, உலகளாவிய கவனத்தையும் ஈர்த்துள்ளது, இதற்கு உதாரணமாக திரு. கமல்ஹாசன் போன்ற பிரபலங்கள் உள்ளனர். அவர்களின் படங்கள் பல ஆண்டுகளாக எல்லைகளை கடந்து வெற்றி பெற்றுள்ளன. ஆர் ஆர் ஆர் மற்றும் கேஜி எஃப்-2 போன்ற படங்களாலும், தமிழ் சினிமாவின் கதைசொல்லலாலும் கொரோனா பெருந்தொற்றுக்கு பிந்தைய திரைத்துறை மறுமலர்ச்சி, இந்தியாவின் பொழுதுபோக்குத் துறையை தொடர்ந்து முன்னெடுத்து செல்கிறது.

டிஜிட்டல் ஊடகங்கள் வேகமாக வளர்ந்து வருவதால், தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் ஆகிய இரண்டு துறைகளும் இணைந்து செழிக்கும் மகத்தான திறனை கொண்டுள்ளன. விரைவில் தொடங்கப்பட உள்ள வேவ்ஸ் போன்ற அமைப்புகள் மற்றும் புதுமையான தொடர் முயற்சிகளின் காரணமாக இந்திய பொழுதுபோக்கு துறை உலகளாவிய பாய்ச்சலுக்கு தயாராக உள்ளது," என்றார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் அறிவுசார் அமர்வுகள், கூட்டங்கள், பயிற்சி பட்டறைகள், உள்ளடக்க சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் உள்ளிட்டவை இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் வளர்ந்து வரும் ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையின் முக்கிய அம்சங்களை இந்த மாநாடு ஆய்வு செய்யும். இந்திய சினிமாவின் உலகளாவிய செல்வாக்கு, தொலைக்காட்சி மற்றும் ஓடிடி துறைகளால் ஏற்பட்டுள்ள மாற்றம், ஒளிபரப்பு மற்றும் இசை நுகர்வை மறுவரையறை செய்யும் புதுமை திட்டங்கள் மற்றும் கேமிங், அனிமேஷன், விஎஃப்எக்ஸ் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவின் எழுச்சி ஆகியவை மீது முக்கிய கவனம் செலுத்தப்படும். மேலும், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையில் வணிகம் செய்வதை எளிமைப் படுத்துவது (இஓடிபி), ஒழுங்குமுறை அமைப்புகள், கொள்கைகள், தடையற்ற, வளர்ச்சி சார்ந்த தொழில் சூழல் பற்றிய விவாதங்கள் நடைபெறும்.

ப்ளேநெக்ஸ்ட் - டெவலப்பர் தினம் என்ற சிறப்புப் பிரிவு, கேமிங், இணைய விளையாட்டு மற்றும் இது சார்ந்த பொழுதுபோக்குகள் குறித்து ஆராயும். ஏவிஜிசி-எக்ஸ்ஆர் துறையில் உலகளாவிய முன்னோடியாக இந்தியா உருவெடுப்பதை இது வெளிப்படுத்தும். ஃபிக்கி ஊடக மற்றும் பொழுதுபோக்கு குழுவின் இணைத் தலைவர் & மெட்டா நிறுவன துணைத் தலைவர் மற்றும் இந்திய தலைவர் சந்தியா தேவநாதன்; ஃபிக்கி ஊடக மற்றும் பொழுதுபோக்கு குழுவின் இணைத் தலைவர் & வார்னர்ஸ் பிரதர்ஸ் டிஸ்கவரி மூத்த துணை தலைவர் மற்றும் இந்தியா மற்றும் தெற்கு ஆசியாவுக்கான தலைமை மேலாளர் அர்ஜுன் நோஹ்வர்; மற்றும் ஃபிக்கி தமிழ்நாடு மாநில கவுன்சில் தலைவர் டாக்டர் ஜி.எஸ்.கே. வேலு உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். ஆஷிஷ் பெர்வானி, ரவி கொட்டாரகரா, கார்த்திகேயன் சந்தானம், சஞ்சய் ஏ. வாத்வா, அங்கூர் வைஷ், ஸ்வேதா பாஜ்பாய், மகேஷ் ஷெட்டி, கிருஷ்ணன் குட்டி, ரவிகாந்த் சப்னவிஸ், முஞ்சல் ஷ்ராப், வைபவ் சவான், ஜேக்ஸ் பிஜாய், பிஜாய் அற்புதராஜ், ஆஷிஷ் குல்கர்னி உள்ளிட்ட திரையுலக முன்னணியினரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள ஏல அரசாணை

சென்னை, 23 பிப்ரவரி 2025: குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையில் (சிபி சிஐடி) பயன்படுத்தப்பட்டு கழிவு செய்யப்பட்ட டாடா ஸ்பேசியோ - 6 (ஃபோர் வீலர்ஸ்) மற்றும் 2 மோட்டார் சைக்கிள்ஸ் ஆகிய 8 வாகனங்களை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் [ஜி.ஓ.எம்எஸ். நம். 2275 ஹோம் (டிரான்ஸ்போர்ட்-இ) டிபார்ட்மென்ட். தேதி. 10.10.1990] தெரிவித்துள்ளபடி 11.03.2025 (செவ்வாய் கிழமை) காலை 10:30 மணிக்கு பொது ஏலத்தின் வாயிலாக விற்பனை செய்ய இருக்கின்றது. மேற்கண்ட வாகனங்களில் தநா07 ஜி 2633 [டாடா ஸ்பேசியோ] என்ற நான்கு சக்கர வாகனம் சி.பி.சி.ஐ.டி, திருநெல்வேலி அலுவலகத்திலும், தநா07 ஜி 2622 [டாடா ஸ்பேசியோ] என்ற நான்கு சக்கர வாகனம் சி.பி.சி.ஐ.டி, தூத்துக்குடி அலுவலகத்திலும், தநா07 ஜி 2635 [டாடா ஸ்பேசியோ] என்ற நான்கு சக்கர வாகனம் ஒசியு - சி.பி.சி.ஐ.டி., கோயம்புத்தூர் அலுவலகத்திலும், பிற 3 டாடா ஸ்பேசியோ நான்கு சக்கர வாகனங்கள் [தநா07 ஜி 2579, தநா07 ஜி 2581 & தநா07 ஜி 2589], 2 இருசக்கர வாகனங்கள் [தநா09 ஜி 2710 - டிவிஎஸ் ஸ்டார் சிட்டி & தநா01 ஜி 7341- ஹீரோ எக்ஸ்ட்ரீம்] ஆகிய 5 வாகனங்கள் சி.பி.சி.ஐ.டி, எழும்பூர், சென்னை யூலைமையிடத்திலும் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. இந்த வாகனங்கள் தற்போது உள்ள நிலையிலேயே பொது ஏலத்தின் வாயிலாக விற்பனை செய்ய இருப்பதால், ஏலதாரர்கள் இவ்வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும் இடங்களுக்கு சென்று வாகனங்களை பார்வையிட்டு கொள்ளலாம். அனைத்து வாகனங்களுக்குமான ஏலம் சி.பி.சி.ஐ.டி, தலைமையிடம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை அலுவலகத்தில் நடைபெறும். ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள், ஏலத்திற்கு முன்னதாக 11.03.2025 அன்று முன்பணம் ரூபாய் 2,000/- செலுத்தி பதிவு செய்து கொண்டு ஏலத்தில் கலந்து கொள்ளலாம். வாகனங்களை ஏலம் எடுத்த நபர் ஏலத்தொகை மற்றும் அதற்கான ஜிஎஸ்தி தொகையையும் வங்கி கணக்கின் வாயிலாக உடனடியாக செலுத்த வேண்டும். முன்பணத் தொகை இரசீது எந்த பெயரில் பெறப்படுகிறதோ, அவரே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படுவர்.

மேலும் அவர் பெயரிலேயே வாகனத்திற்கு உண்டான உரிமை இரசீதும் வழங்கப் படும். கூலத்தில் கலந்து கொள்பவர்கள் அரசால் வழங்கப்பட்ட முகவரியுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டை (ஆதார் அட்டை, பான் கார்டு, வாகன ஓட்டுநர் உரிமம்) மற்றும் ஏலம் எடுப்பவரின் ஜிஎஸ்தி நகலை ஏலத்திற்கு முன்னதாக அளிக்க வேண்டும். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பணம் செலுத்திய பின்னரே, வாகனத்தை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார். மேலும், ஏலம் தொடர்பான விபரங்களுக்கு கீழ்கண்ட காவல் ஆய்வாளர்களது தெலைபேசி எண்களில் அலுவலக நேரத்தில் தெடர்பு கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. காவல் ஆய்வாளர், சி.பி.சி.ஐ.டி, எழும்பூர், சென்னை - 9884351511, 2. காவல் ஆய்வாளர், சி.பி.சி.ஐ.டி, திருநெல்வேலி - 9498193378, 3. காவல் ஆய்வாளர், சி.பி.சி.ஐ.டி, தூத்துக்குடி - 9443613299, 4. காவல் ஆய்வாளர், சி.பி.சி.ஐ.டி, ஓசியு கோயம்புத்தூர் - 9498174469.

# 2024-2025-ம் ஆண்டில் தமிழகத்தில் விஜய்யின் த.வெ.க. உள்பட நாடு முழுவதும் 60 புதிய கட்சிகள் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

சென்னை, 23 பிப்ரவரி 2025: 2024-2025-ம் ஆண்டில் இந்தியா முழுவதும் 60 புதிய கட்சிகள் உருவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

சமூக சேவைக்கு முகங்கள் தேவையில்லை, ஆனால் வாக்கு வங்கி அரசியலுக்கு முகங்களுடன் கொடியும், பெயரும் தேவை. கட்சியின் பெயரும், சின்னமும், கொடியும் தான் அரசியல்வாதிகளுக்கு அடையாளம். தங்கள் மனம் கவர்ந்த தலைவர்களுக்கு தங்கள் ஒற்றை விரலால் மக்கள் மகுடம் சூடும் நாளே தேர்தல்.

அந்த வகையில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில், 6 தேசிய கட்சிகள், 58 மாநில கட்சிகள், 2,763 அங்கீகரிக்கப்படாத பதிவு பெற்ற கட்சிகள் இருக்கிறது. இந்திய தேர்தல் ஆணையத்தின் 2024 மார்ச் தரவுகளின்படி இந்த விவரம் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதில் அங்கீகரிக்கப்படாத, பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் எண்ணிக்கை என்பது நாளுக்கு நாள் புற்றீசல் போல அதிகரித்து வருகிறது.

அந்த வகையில் கடந்த 2024-ம் ஆண்டு அக்டோபர் மாத நிலவரப்படி இந்தியாவில் 39 புதிய கட்சிகள் உதயமாகி யுள்ளது. தமிழகத்தில் 3 கட்சிகள் பதிவு செய்யப்பட் டுள்ளது. நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம், நமது உரிமை காக்கும் கட்சி, மக்கள் முரசு கட்சி ஆகிய 3 கட்சிகள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

நமது உரிமை காக்கும் கட்சி தியாகராயநகர் முகவரியிலும், மக்கள் முரசு கட்சி கொடுங்கையூர் பகுதியில் இருந்தும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. 2025 ஜனவரியில் 21 கட்சிகள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் என்ற பிரிவில் அந்த கட்சிகள் இடம் பெற்றுள்ளது.

2,763 அங்கீகரிக்கப் படாத பதிவு பெற்ற கட்சிகளில் 50 சதவீத கட்சிகள் தேர்தலை சந்திக்காமல் லட்டர் பேடு கட்சிகளாக வலம் வருவது புள்ளி விவரம் ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுபோன்ற கட்சிகள் மீது தேர்தல் ஆணையம் அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. 2022-ம் ஆண்டு 86 கட்சிகளை நீக்கியும், 253 கட்சிகள் செயல்படாதவை என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

கட்சிகளின் பெருக்கம் ஒரு பக்கம் இருந்தாலும், 5 ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் வலிமையான ஜனநாயக திருவிழாவில் 100 சதவீத வாக்குப்பதிவு என்பது பெரும் கனவாகவே இருந்து வருகிறது. அந்த கனவை நோக்கி ஜனநாயக அரசியல் தற்போது நகர தொடங்கியிருக்கிறது. 2026-ம் ஆண்டு ஜனநாயக திருவிழாவான சட்டசபை தேர்தலை தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய 4 மாநிலங்களும், புதுச்சேரி யூனியன் பிரதேசமும் சந்திக்க இருக்கிறது.

# ஜெலன்ஸ்கியுடன் பேசுவதற்கு ஒன்றுமில்லை: அமெரிக்க அதிபர் டிரம்ப் கைவிரிப்பு

சென்னை, 23 பிப்ரவரி 2025: உக்ரைன் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவர ஜெலன்ஸ்கியுடன் பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் புதினுடனான ஆலோசனை சிறப்பாக அமைந்தது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். 3 ஆண்டுகளாக நடந்துவரும் உக்ரைன் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆர்வம் காட்டி வருகிறார். அந்த வகையில், அவர் அது தொடர்பாக அண்மையில் ரஷ்ய அதிபர் புதினுடன் பேசியுள்ளார். இது தொடர்பாக பாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்துக்கு டிரம்ப் பேட்டி அளித்தார்.

முந்தைய பிடன் அரசு உக்ரைனுக்கு பெருமளவில் ஆயுத உதவியும், நிதி உதவியும் வழங்கி வந்தது. இந்நிலையில் டிரம்ப் ஆட்சிக்கு வந்ததும் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. இது ஜெலன்ஸ்கியையும், நேட்டோ உறுப்பு நாடுகளையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. முன்பு போல் அமெரிக்க ஆதரவை இனியும் எதிர்பார்க்க முடியாது என்பதை ஜெலன்ஸ்கிக்கு ஒருமுறை, இருமுறை அல்ல, பலமுறை தொடர்ச்சியாக டிரம்ப் உணர்த்தி வருகிறார். அந்த வகையில் பாக்ஸ் நியூஸ் நிறுவனத்துக்கு டிரம்ப் அளித்துள்ள பேட்டியில், ரஷ்ய அதிபர் புதினுடனான பேச்சுவார்த்தை சிறப்பாக அமைந்தது. ஆனால் உக்ரைன் அதிபருடன் பேசவில்லை. உக்ரைன் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தையில் நான் ஜெலன்ஸ்கியுடன் பேசுவதற்கான அவசியமில்லை என்று கருதுகிறேன்.